Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC. 78/2019

**P.W**. 1 (LW1)

| | |
|---|---|
| Name | : திருமதி. அருள்குமாரி |
| Father/Husband Name | : திரு. நந்தகோபால் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி 2.3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.03.2026.

**மனுதாக்கல் செய்து அனுதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் MSC B.Ed படித்துள்ளேன். போலிசார் இது சம்பந்தமாக என்னை எப்பொழுது விசாரணை செய்தார்கள் எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து செய்து விசாரணை செய்தார்கள். எத்தனை நாள் கழித்து விசாரணை செய்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல்தான் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சில இடங்களில் புகாரில் மாற்றம் இருக்கிறது. புகாரில் நான் சொல்லாத விஷயங்கள் எழுதப்பட்டிருந்தது என்றால் யார் யாரை அடித்தார்கள் போன்ற விவரங்கள் மாறியுள்ளது. சம்பவம் நடந்த பிறகு எவ்வளவு நேரம்

கழித்து என்னுடைய தம்பிகள் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் அவர்கள் வீட்டில்தான் இருந்தார்கள். சம்பவமானது நான் சர்ச்சிக்கு செல்லும் வழியில் நடைபெற்றது என்றால் சரியல்ல எங்கள் வீட்டில் வாசலில் நடைபெற்றது. சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு நேராக என் கணவர் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் இல்லை. சம்மன் கொடுக்க போலிசார் என் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரிதான். அதற்கு முன் என்னை விசாரணை செய்தார்கள். என்னுடைய தம்பியையும் என் அம்மாவையும் நான்தான் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன் என்றால் என் அண்ணன்தான் அழைத்துச்சென்றார். நடந்த சம்பவத்தை எத்தனை பேர் பார்த்தார்கள் என்றால் தெருவில் உள்ள அனைவரும் பார்த்தார்கள். சம்பவத்தை பார்த்த நபர்கள் யார் வந்து சண்டையை விலக்கி விட்டார்கள் என்றால் யாரும் வரவில்லை. சம்பவம் எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் வழக்கமாக நாங்கள் சர்ச்சிர்க்கு சுமார் 7 முதல் 8 மணியளவில் செல்வோம் அப்போதுதான் சம்பவம் நடைபெற்றது. நான் கணவர் வீட்டை விட்டு அம்மா வீட்டிற்கு எதற்காக வந்தேன் என்ற விவரத்தை என் அம்மா அப்பாவிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் என் கணவருடன் வாழ பிடிக்காததால் சமாதானம் பேசவந்த என் கணவரின் உறவினர்களின் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் எதிரிகள் எங்கள் வாகனத்தின் மீது கல்லை எரிந்தார்கள் என்று சொல்லியுள்ளது போல் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்கிற விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. என் கணவருக்கும் எனக்கும் ஏற்பட்ட பிரச்சனைகள் குறித்து நான் காவல் நிலையத்தில் புகார்

அளித்துள்ளேனா என்றால் இந்த சம்பவம் நடைபெற்றபிறகு நான் மாமல்லபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஆனால் அந்த புகாரை குறித்து என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்கிற விவரம் எனக்கு தெரியாது. எங்கள் வீட்டில் இந்த சம்பவம் குறித்து காஞ்சிபுரம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தபிறகுதான் சட்ராஸ் காவல் நிலையத்தில் புகாரை எடுத்துக்கொண்டு வழக்குப்பதிவு செய்தார்கள். நான் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில்தான் புகார்கொடுத்தேன் என்றால் சட்ராஸ் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரை எடுத்துக்கொள்ளாததால் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். என் கணவருடன் வாழ பிடிக்காததால் அவருடன் சேர்த்துவைத்துவிடுவார்கள் என்கிற பயத்தில் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால் ஊர் பொதுமக்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டிருப்பார்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over
in the witness in the present of the accused
and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.